# சத்தியம் உங்களை இவற்றிலிருந்து விடுதலையாக்கும்



ப்ரின்ட்லேன்ட் பப்லிஷர்ஸ்

லைனஸ் மற்றும் சூசன் டேனியேல்


**To Subscribe to this magazine Free of Cost:**

**In Sri Lanka**
*Write to*:
The Christadelphians,
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA.

**In India**
*Write to*:
The Christadelphians,
P.O. Box 4237
Bangalore 560-042
India


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 46


- முந்துரிமை அல்லது சிறப்புரிமையானவை
- கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் தந்த சில கட்டளைகள்
- இரத்தம் - இறைவனின் படைப்பு
- கேள்வி
- பாதையில் முகடுகள்
- வாசித்துச் சிந்தித்தல்

# Issue 46


- முந்துரிமை அல்லது சிறப்புரிமையானவை
- கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் தந்த சில கட்டளைகள்
- இரத்தம் - இறைவனின் படைப்பு
- கேள்வி
- பாதையில் முகடுகள்
- வாசித்துச் சிந்தித்தல்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk



**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# முந்துரிமை அல்லது சிறப்புரிமையானவை



காலம் என்பது கிடைத்தற்கரிய ஒன்றாக ஆகி விட்ட காலத்தில் நாம் வாழ்கிறோம். செய்வதற்கு எவ்வளவோ வேலைகள் உள்ளன. ஆனால் அவற்றைச் செய்வதற்கான நேரமோ மிக மிகக் குறைவாகக் காணப்படுகிறது. நேரத்தை மேலாண்மை செய்யும் வல்லுநர்கள் நாம் எவற்றை முதன்மையானவைகளாக வைக்கிறோம் என்பதைப் பொறுத்தது என்கிறார்கள்.

## முந்துரிமைகள் என்றால் என்ன ?

சொல்லகராதி அவைகளை, "தகுதி வரிசையில் முன்வரும் உரிமை பெற்றவை அல்லது சிறப்புரிமை பெற்றவை" என விளக்கம் தருகிறது. சாதாரண வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், அது மிக முக்கியமானதால், மற்றவைகளை விட அது முதலில் வருகிறது. ஆகவே வெளிப்படையான உண்மை என்னவென்றால் தேவனும் அவருக்கு நாம் செய்யும் ஊழியமும் தான் நம் வாழ்க்கையில் முதன்மையாக இருக்க வேண்டும்.

## வேதத்திலிருந்து எடுத்துக்காட்டுகள்



தேவனை முதன்மையாக வைத்த நபர்கள் வேதத்தில் அநேகர் உண்டு. அவர்களின் முன்மாதிரியைக் கவனிப்பது நமக்கு நன்மை பயக்கும். தனக்குண்டான எல்லாவற்றையும் காணிக்கைப் பெட்டியில் போட்ட ஏழை விதவை அத்தகைய ஒரு முன்மாதிரி.

''அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு. இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்

பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனுத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.'' (லூக்கா 21:1-4)

இந்த ஏழை விதவையின் தாராளப் பண்பு நம்மை வியப்பிலாழ்த்துகிறது. ஏன் இப்படிச் செய்தாள் என்று யோசிக்கிறோம். தன் எல்லாப் பணத்தையும் போட்டுவிடுவதற்கு அவளை உந்தித்தள்ளியது எது ? நாம் ஊகிக்கலாம். ஆனால் அவளுக்கு அது மகாமுக்கியமான காரியமாகப்பட்டது. என்பது தெளிவாயுள்ளது. தேவனுடைய வேலைக்குக் கொடுப்பது தான் அவள் வாழ்வில் முதன்மையானதும் முந்துரிமை பெற்றதுமாக இருந்தது.

பொல்லப்பும் அக்கிரமமும் பெருகியிருந்த காலத்தில் நோவா என்ற மனிதனைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டது.

"நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. ....நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். தேவன் பூமியைப் பார்த்தார். இதோ, அது சீர்கெட்டதாயிருந்தது. மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி, மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது. அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது. நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப் போடுவேன்.'' (ஆதி. 6:8-9, 12,13)

இப்பொழுது விசுவாசத்தையும் சகிப்புத்தன்மையையும் பரிட்சிக்கும் கட்டளை ஒன்று பிறந்தது. மிகப்பெரிய அளவுகளில் ஒரு கப்பலைக் கட்டும்படி நோவாவுக்குச் சொல்லப்பட்டது.

"நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு. அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக் கீல் பூசு. நீ அதைப்பண்ணவேண்டிய விதம் என்னவென்றால், பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம் ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமுமாய் இருக்க வேண்டும். நீ பேழைக்கு ஒரு ஜன்னலை உண்டுபண்ணி, மேல்தட்டு ஒருமுழத்தாழ்த்தியிலே அதைச் செய்து முடித்து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்து, கீழ் அறைகளையும் இரண்டாம் தட்டின் அறைகளையும், மூன்றாம் தட்டின் அறைகளையும் பண்ணவேண்டும்''. (ஆதி. 6:14-16).

இன்றைய அளவுகளின்படி பேழை 450 அடி நீளம், 75 அடி அகலம், 45



அடி உயரம், இந்த அளவுகள் ஒரு கால்பந்தாட்ட மைதானத்தை விட நீளமானதும், ஒரு வீட்டின் அகலத்தைப் போல இரு மடங்கும் நான்கு மாடிகளின் உயரமுமாகும். நோவா அதைக் கட்டுவதற்கு 120 ஆண்டுகால விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் தேவைப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இவ்வளவு பிரம்மாண்டமான வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்றால் நோவாவுக்கு அது மிக முக்கியமான ஒன்றாக இருந்திருக்கவேண்டும். சொல்லப்போனால், அவன் வாழ்க்கையில் முழு பொறுப்பும் அர்ப்பணிப்பும் பேழைக்கே உரித்தாயிற்று. உண்மையாகவே அது ஒரு முந்துரிமை தான்.

நவீன உலகின் "காலம் பொன் போன்றது" என்பது. நோவாவும் அந்த விதவையும் விசுவாசத்தில் செயல்பட்டது போல் நாம் காலத்தையும் பணத்தையும் நம் ஆண்டவரின் ஊழியத்திற்கென அர்ப்பணிப்போமா ? அது முந்துரிமை பற்றிய விஷயம்.

## அப்போஸ்தலர்களின் பொறுப்புணர்வு

இயேசுவாகிய மேசியாவைக் கண்டுகொண்டதும் அந்திரேயா பேதுரு மற்றும் பிலிப்பு ஆகிய அவர்களெல்லாரும் இயேசுவுக்கு உடனடியாகப் பின்சென்றார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சீஷனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு : மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம் மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு. நீ எனக்குப் பின்சென்று வா என்றார்.'' (யோவான் 1:37,40,41,43)

அதைப்போலவே, பவுலும் தன் மன மாறுதலுக்குப் பிறகு நற்செய்தியைப் பரப்புவதற்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அந்தச் சமயத்திலிருந்து தயக்கமோ, பின்னிட்டுப் பார்த்ததோ அவர் வாழ்க்கையில் கிடையாது. இதுவே அவர்களெல்லாருக்குமே முக்கியம் - அவர்கள் வாழ்க்கையின் முந்துரிமைகளில் முதலாவது இதுதான்.

## தாவீதின் உந்துணர்வு

இயேசு நம்மை நேரடியாக, முகத்துக்கு முகம் பேசி அழைக்கவில்லை. ஒளிரும் ஒளி வெள்ளத்திலுள்ள அவரின் பிரசன்னத்தால் நம் கண் கூசவுமில்லை, குருடாகவுமில்லை. அப்படியென்றால், அதே உற்சாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் நாம் இயேசுவுக்குப் பின் சென்று, தேவனுக்கு அதே உற்சாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் சேவை செய்ய எங்ஙனம் ஆற்றல் பெறுவோம் ? தேவனுடைய வார்த்தைக்காக தாவீது கொண்டிருந்த வாஞ்சையில் அதற்கான வழியைக் காட்டுகிறான்.

“உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுதும் அது என் தியானம். இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன். கர்த்தாவே உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும். உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம். நித்தியம்.” (சங்கீதம் 119:159,160)

சரியான முன்னுரிமைகளை நாம் வைப்பதோடு அதிலே நடப்பது குறித்த அறிவைப் பெறுவதற்கான ஒரே நிச்சயமான வழி தேவனுடைய வார்த்தையைப் படித்து தியானம் செய்வது தான். அப்படி இருந்தாலும் அன்றாட வேலையில் மூழ்கி நாம் வழி தவறக் கூடும்.

## சிந்தனைக்குத் தீனி

கீழ்க்கண்ட பட்டியல் நம்மை சிந்திக்க வைக்கும்.

கோவிலுக்குப் போகும்போது இருபதுரூபாய் பெரிய தொகையாகவும் கடைக்குப் போகும்போது சிறிய தொகையாகவும் தெரிவது ஏன்?

ஒரு மணிநேரம் தேவனுக்கு ஊழியம் செய்வது அதிகநேரம் எனவும் அறுபது நிமிடம் விளையாடுவது மிகக் குறுகிய நேரமாகவும் தெரிவது ஏன்?

ஜெபிக்கும்போது, எதைச்சொல்லி ஜெபிக்க என்று நமக்கு தெரியவில்லை. ஆனால் நம் நண்பர்களிடம் என்னவெல்லாம் சொல்ல வேண்டும் என நினைப்பதில் நமக்குக் கஷ்டமே இல்லை. ஏன்?

காலை மாலை வேத வாசிப்புக்கு நமக்கு நேரம் இல்லை. இருப்பினும் தொலைக்காட்சியைப் பலமணிநேரங்கள் பார்க்கிறோம். அது ஏன்?

இயேசு சீக்கிரம் வரப்போகிறார். என நாம் விசுவாசிப்பதாக சொல்லிக்கொள்கிறோம். ஆனால் நம் நேரத்தையும் ஆற்றலையும் ஓய்வுகாலம் மற்றும் ஆயுள் காப்பீட்டு ஆகியவை பற்றி நினைப்பதிலேயே செலவிடுகிறோமே தவிர மற்றவர்களுக்கு நற்செய்தியைச் சொல்வதில்லையே, அது என்ன?

எதிர்பார்த்த நேரத்திற்கும் அதிகமாக வேதாகமம் பற்றிப் பேசினால் தாங்க முடியாத நமக்கு, ஒரு கால் பந்து விளையாட்டு அதிக காலம் எடுத்துக் கொண்டாலும் பரவச மூட்டுவதாக இருப்பது ஏன்?

சபை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இரண்டு மூன்று வாரத்துக்கு முன்னமேயே சொன்னால்தான் வரமுடியும் என்கிற நாம், ஒரு சமுதாய நிகழ்ச்சிக்குக் கடைசி நேரத்தில் கூப்பிட்டாலும் கூட, எப்படியோ சமாளித்துப் போய் விடுவது ஏன்?

வேதத்தில் ஒரு அதிகாரம் படிப்பது கஷ்டம், ஆனால் பிரபல நாவல் ஒன்றை வாசிப்பது எளிதாகிறது.



மேலே கூறப்பட்டவை நம்மைச் சற்று சிந்திக்க வைக்கலாம். சிரிப்பு கூட வரலாம். ஆனால் நம் நேரத்தை எவ்விதம் செலவிடுகிறோம் என்பதன் மூலம் நம் உள்ளுணர்வுகள் வெளிக்காட்டப்படுகின்றன.

## இயேசுவின் முந்துரிமை

தேவனை முதலாவதாக வைப்பதில் வரும் இறுதி வெற்றியை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செயல்படுத்திக் காட்டியிருக்கிறார். வளரும் பையனாக அவர் தேவனுடைய வார்த்தையைப் படிக்க ஆரம்பித்து சரியானவற்றைத் தெரிந்து கொண்டார்.

தங்கள் பன்னிரண்டு வயது மகனுக்காக ஓடி ஆடித்தேடிய பிறகு, வேத வல்லுநர்களைத் தமது வேதவாக்கிய அறிவைக் கொண்டு கலங்கடித்துக் கொண்டிருந்தவராகக் கண்ட பெற்றோரை இயேசு கடிந்துகொண்டார். அவர் அளித்த பதிலை அவரின் தாயார் ஒருபோதும் மறக்கவில்லை. “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டிய தென்று அறியீர்களா?” (லூக்கா 2:49)

அவர் குடும்பம் சம்பந்தப்பட்ட இன்னொரு நெருங்கிய உறவு குறித்த சம்பவத்தில் மற்றெல்லாவற்றையும் விட, தன்அருமைத் தாயையும் கூட நினைக்காமல் நம் ஆண்டவர் தேவனுடைய ஊழியத்தையே தெரிந்து கொண்டார்.

“அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: இதோ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரனும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப்பார்த்து, இதோ என்தாயும், என் சகோதரரும் இவர்களே, தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான். என்றார். (மாற்கு. 32:35)

நம் குடும்பத்தாரையும் நம் வீட்டாரையும் தேவன் தந்த ஆசீர்வாதம் என்றெண்ணி அவர்ளை நேசிப்பது இயல்பானது. நல்லதும் கூட, சில சமயங்களில் அவர்கள் நம் நேரம் முழுமையையும் கவனத்தையும் தம் பால் ஈர்த்துக் கொண்டு அலைக்கழித்து விடுகிறார்கள். அதற்கு இயேசு : நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை என்றார்.” (மத். 8:20) குடும்பம் அல்லது உடைமைகளால் தடுக்கப்படாமல், தமக்கென எந்த இடமுமே இல்லாதவராக, இயேசுவானவர் தம் ஆற்றல்களையெல்லாம் தம் பரமபிதாவின் சித்தத்தை செய்வதற்கென பயன்படுத்தினார். அவரின் முந்துரிமை கீழ்ப்படிதல் தான்.

**- ஸ்டீவ் கறி**

# கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் தந்த சில கட்டளைகள்

1. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். (மத். 5:44).
2. தீமைகளோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. (மத். 5:39-40).
3. நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அநியாயத்தை சகித்துக் கொள்ளுங்கள். (ரோமர். 12:18,19, 1கொரி 6:7)
4. உன்னுடையதை எடுத்துக் கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதே. (லூக்கா. 6:29,30)
5. உன் எதிரொளியோடு சீக்கிரமாய் நல்மனம் பொருந்து. சமாதானத்துக்காக, நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். (மத். 5:25, 1கொரி 6:7)
6. ஐசுவரியவானாகப் பாடுபடாதே, எந்த ஒரு நற்கிரியையும் செய்ய ஆயத்தமாயிரு; உன்னிடத்தில் கேட்கிறவர்களுக்குக் கொடு; உபத்திரவப்படுகிறர்களுக்கு உபத்திரவத்தை நீக்கு. (1தீமோ. 6:8; ரோமர் 12:13; எபி. 13:16; யாக். 1:27)
7. மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதேயுங்கள்; உன் வலது கை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது, (மத்தேயு 6:1-4)
8. ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; தீமையை நன்மையினாலே வெல்லு. (ரோமர்12:17,21).
9. உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; சபித்தல் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். (மத். 5:44).
10. தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக ஆசீர்வதியுங்கள். (1பேதுரு 3:9).
11. உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். (மத். 5:44).
12. ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள் மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள். (யாக். 4:11; 5:9; மத். 7:1)



13. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், சகலவிதப்புறங்கூறுதலும் ஒழியக் கடவது. (எபே. 4:31; 1பேதுரு. 2:1).
14. உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிடுங்கள். (யாக்கோபு 5:16).
15. நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கொத்த வேஷந்தரியாதிருங்கள். உலகத்தில் அன்பு கூராதிருங்கள். (ரோமர் 12:2; 1யோவா. 2:15, யாக். 4:4)
16. எல்லா அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து விடு. உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு. (தீத்து 2:12, மத். 5:30)
17. வேலைக்காரரே, மோசமான எஜமான்களுக்கும் உண்மையாயிருங்கள். (எபே. 6:5-8)
18. மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள். (ரோமர் 12:16)
19. ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள். (ரோமர். 13:7,8)
20. உனக்குத் தெரிந்த அல்லது கேள்விப்பட்ட பாவச்செயல் பற்றிப் பிறரிடம் பேசாதே. ஆனால் குற்றஞ்செய்தவன் நீயும் அவனுமாகத் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து. அவன் சீர்பொருந்தவேண்டும் என்ற எண்ணத்தோடு அப்படிச்செய். (மத். 18:15; கலா. 6:1).
21. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்பு கூருவாயாக. (மத். 22:37).
22. எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்; சுருக்கமாக ஜெபம் பண்ணுங்கள். அந்தரங்கத்தில் ஜெபம் பண்ணுங்கள். (லூக்கா. 18:1; மத். 6:7)
23. எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். உங்கள் வழிகளில் அவரை நினைத்துக் கொள்ளுங்கள். (எபே. 6:20)
24. மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (மத். 7:12)
25. நீங்கள் கிறிஸ்துவை முன்மாதிரியாக வைத்து, அவருடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வாருங்கள். (1பேதுரு 2:21)
26. விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்களில் வாசமாயிருப்பாராக. (எபேசியர் 3:17).
27. பூமியிலுள்ள எல்லாவற்றைக் காட்டிலும், ஆம் உன் உயிர் மற்றும் உன் வாழ்க்கையைக் காட்டிலும் கிறிஸ்துவை மேலாக மதிப்பாயாக. (லூக்கா. 14:26)

28. கிறிஸ்துவை மனிதர் முன் தாராளமாய் அறிக்கை பண்ணு. (லூக்கா. 12:8)

29. வாழ்க்கையின் கவலைகளோ சிற்றின்பங்களின் கவர்ச்சிகளோ கிறிஸ்து உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக. (மத்தேயு. 22:39)

30. உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக (மத்தேயு 22:39)

31. யார்மேலும் உன்னை உயர்த்தி அதிகாரம் செலுத்தாதே. (மத். 23:10-12)

32. அவனவன், தனக்கானவைகளையே நோக்காமல், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும். (பிலிப். 2:4)

33. ஜீவ வார்த்தையைப் பிடித்துக்கொண்டு, உங்கள் வெளிச்சம் மனுஷர் முன் பிரகாசிக்கக் கடவது. நமக்குக் கிடைக்கும். சமயத்துக்குத்தக்கதாக. யாவருக்கும் நன்மை செய்யக்கடவோம். (மத். 5:16; பிலி. 2:16; கலா. 6:10)

34. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருங்கள். (பிலிப். 2:15)

35. எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும் அன்புள்ளவனும், தயவாயும் மன உருக்கமாயும், மன்னிக்கிறவனாயும் இருக்க வேண்டும். (2தீமோ 2:24; தீத்து. 2:2, எபேசி. 4:32)

36. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். (1பேதுரு 1:13; 5;8)

37. பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே, மெய்யைப் பேசக் கடவன்.

38. எதைச் செய்தாலும் மனுஷருக்கென்று செய்யாமல், தேவனுக்கென்று முழு இருதயத்தோடு செய்யுங்கள். (கொலோசெயர் 3:23)

39. விழித்திருங்கள்; சந்தோஷமாயிருங்கள்; தைரியமாயிருங்கள். (1கொரி 16:13; பிலி. 4:4; 1தெச. 5:6-10)

40. மனத்தாழ்மையுடன் நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளுங்கள். (கொலோ 3:12. ரோமர். 12:13).

41. யாவரோடும் சமாதானமாயிருங்கள். (எபிரேயர் 12:14 ரோமர். 12:18)

42. சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். (ரோமர் 12:15)

43. உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள், புண்ணியம், புகழ், ஆகியவைகளை நாடுங்கள்.



44. வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும், வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் (எபேசியர் 5:3,4)

45. நீங்கள் எதை செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள். (1கொரி 10:31)

46. நீங்கள் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாயும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாயும் எண்ணிக் கொள்ளுங்கள். (ரோமர் 6:11; 2கொரி 5:15).

47. நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாய் நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. (தீத்து 2:14; கலா. 6:9)

48. ஒருவனையும் தூஷியாதே (தீத்து 3:2)

49. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே வாசமாயிருப்பதாக. (கொலோசெயர் 3:16)

50. உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேற்றினதாயும் இருப்பதாக (கொலோ 3:8; 4:6).


51. துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருங்கள். (தீத்து 3:1)

52. உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். (1பேதுரு 1:16)

53. விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காதிருங்கள். (1தீமோ 5:14)

54. கர்த்தருக்குட்பட்டவனை மட்டுமே விவாகம் பண்ணு. (1கொரி 7:39)

# இரத்தம் - இறைவனின் படைப்பு



நீங்கள் எப்பொழுதாவது உங்கள் விரலில் காயம் ஏற்படுத்திக் கொண்டதுண்டா ? எல்லாருமே வாழ்க்கையில் பல தடவை விரலில் காயம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆயினும் நீங்கள் இந்த விபத்துகளினால் உயிரிழக்கவில்லை. வெட்டப்பட்ட உங்கள் விரலிலிருந்து இரத்தம் வடிவது நிற்காவிட்டால் என்ன ஆகியிருக்கும் என எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா ? சந்தேகத்திற்கிடமின்றி கட்டாயம் இறந்து விடுவீர்கள். உங்கள் இருதயம் துடிப்பது நின்று போகும் வரை உங்கள் இரத்தம் அழுத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வரும். வெட்டுக் காயங்கள், சிராய்ப்புகளால் நாம் சாவதில்லை. ஏனெனில், கால்பந்தாட்டப் போட்டியின்போது, அவசர சிகிச்சைக்கென தயாராய் நிற்கும் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் வண்டி போல, நம் உடலில் ஏற்பட்ட காயத்தை, இழப்பைச் சீர்செய்வதற்கான அமைப்பும் உள்ளது.

இந்த அற்புதமான அமைப்பை நாம் கண்டுகொள்வதே இல்லை. இரத்த ஒழுக்கு நோயுள்ளவர்களாய் நாம் இல்லாவிட்டால், வெட்டுப்பட்ட விரலில் ஒரு பிளாஸ்திரியைப் போட்டுவிட்டு, அதை மறந்து விடுகிறோம். ஆனால் நம் உடலில் இந்தப் பாதுகாப்பு அமைப்பு எப்படி வந்தது என்று கேட்டோமாயின் படைப்பு குறித்த விவாதம் நம்மை ஆச்சரியப்படவைக்கிறது. வேறு வார்த்தையில் சொல்வதானால், பரிணாமக் கொள்கையின் வாதம் இங்கே திருப்தியளிக்கிறதில்லை.

நம் விரலை நாம் வெட்டிக்கொள்ளும் போது என்ன நடக்கிறது எனக் காண்போம். ஒரு முள் உங்கள் காலை சிராய்க்கும் படியாகிவிட்டது என வைத்துக்கொள்வோம். வேகமாக, உங்கள் கைக்குட்டையை சிராய்ப்பின் மீது




வைக்கிறீர்கள். ஓரிரு நிமிடங்களுக்குள் சிவப்பான ரத்தத் துளிகள் தோன்றி, பின்னர் அவை காய ஆரம்பித்து இருண்ட நிறமாகிறது. மறுநாள் காலைக்குள், காயத்தின் மீது ஒரு பாதுகாப்பு ஏடுதோன்றி காயத்தை மூடி விடுகிறது. ஒருவாரம் கழித்துப் பார்த்தால், அங்கே லேசாக ஒரு தழும்பு தான் இருக்கும். அந்த முக்கியமான முதல் சில நிமிடங்களில் என்னதான் நடக்கிறது ?

உடலின் போக்குவரத்து மண்டலம் இரத்தம், தசைகளுக்குத் தேவையான ஆக்ஸிஜன் மற்றும் சர்க்கரை, வளர்ச்சிக்கும், இனவிருத்திக்கும் தேவையான உறார்மோன்கள் என்ற சுரப்பு நீர்கள் சிறுநீரகங்களுக்குச் செல்லவேண்டிய கழிவுகள் ஆகியவை இரத்தத்தில் உள்ளன. ஆம், ''மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது'' என மோசேயின் நியாயப்பிரமாணம் கூறுவது உண்மைதான். மனித உடலில் கிட்டத்தட்ட 2 லிட்டர் இரத்தம் உள்ளது. இருதயத்திலுள்ள அழுத்தத்தால் இந்த இரத்தமானது உடல் முழுவதும் செலுத்தப்படுகிறது. எங்காவது ஒரு சிறு துவாரம் தோலில் ஏற்பட்டால், அதன் வழியாக இரத்தம். வேகமாக ஒழுகுகிறது. தந்துகிகளின் கூட்டம் உடைந்தால் இரத்தம் அதிகம் வெளிவருகிறது. கார் ரேடியேட்டரில் ஓட்டை ஏற்பட்டால் நீர் வெளியேறுவது நிற்காது. சில மைல்கள் போன பிறகு நீர் முற்றிலும் காலியாகி வண்டி நின்றுவிடுகிறது. ஆனால் மனித இரத்தம் வித்தியாசமானது. இரத்தம் வெளியேறத் துவங்கிய உடனேயே அது துவாரத்தை அடைகிறது. கடினமான புரோட்டின் இழைகள் கொண்ட அமைப்பு, காயத்திற்கு ஒரு அடைப்பான் போல் செயலாற்றுகிறது.

இரத்தத்தை உறைய வைப்பது எது ? இரத்தத்திலுள்ள வைபிரினோஜன் என்ற ஒருவித புரோட்டின் அமைப்பு, ஒரு பாய் போல் செயல்பட்டு மூடுகிறது. வைபிரினோஜன் பொதுவில், ஒரு நீர்மம் தான். ஆனால் இன்னொரு காரணியாகிய த்ராம்பினோடு சேர்ந்து வைபிரினோஜன். பலம் வாய்ந்த வைபிரின் (Fibrin) எனும் பொருளை உண்டாக்குகிறது. த்ராம்பினும் செயலற்ற பரோத்ராம்பினிலிருந்து உருவாகி அதன்பின் தான் அது செயலாற்ற முடியும். தோலும் நுண்ணிய இரத்தத் தந்துகிகளும் கிழிபடும்போது, பிளேட்லெட்டுகள் என்ற எலும்பு மஜ்ஜை செல்கள் காயமடைந்த இடங்களில் சேர்கின்றன. அப்பொழுது அவற்றின் முன்னிலையில் ப்ரோத்ராம்பின் த்ராம்பினாகவும், வைபிரினோஜன் வைபிரினாகவும் மாறும் சிக்கலான செயல் நடைபெறுகிறது.

இரத்தம் உறைவதற்கு ஏன் இப்படிப் பலபடிகளைக் கொண்ட முறை தேவை ? பதில் எளிமையானது தான். எதிர்பாராத விதமாக இரத்தம் நம் உடலினுள் உறைய வேண்டுமெனில் முக்கியமான இரத்தக் குழாயில் ஒரு கட்டி வைபிரின் தோன்றி இரத்த ஓட்டத்தைத் தடைசெய்யும். அப்போது, பக்கவாதம் ஏற்பட்டு, அதினால் நாம் இறந்து விடுவோம். பலபடிகளைக் கொண்ட முறையில் இரத்தம்

உறைவது நமக்கு முக்கியமான பாதுகாப்பு. வங்கியிலிருந்து பணத்தைப் பெறும் முறை போன்றது. ஒரு எளிய எண் குறியீடாக இருப்பது போதாது. அந்நியன் ஒருவன் அந்த எண்ணை ஊகித்து உங்கள் கணக்கிலிருந்து ரூ. 500 எடுத்துக்கொண்டு போய்விடலாம். ஆனால் பணம் எடுக்கும் இயந்திரம் இரண்டு எண்கள் சரியாக, சற்றும் பிசகாமல் இருக்கவேண்டும் எனக்கேட்கிறது. ஒன்று உங்கள் பணம்பெறும் கார்டிலுள்ள (Cash Card) கண்ணுக்குத் தெரியாத காந்தஎண். அதை உங்கள் நினைவிலிருந்து குறித்தால் தான் இயந்திரம் திறந்து பணத்தைக் கொடுக்கும். இரத்தம் உறைதலும் அப்படித்தான். ப்ரோத்ராம்பின், த்ராம்பினாக மாறும்போது தான் வைபிரினோஜன் இரத்தத்தை உறைய வைக்கும்.



இந்த சிக்கலான இயங்கு பகுதிகள் எப்படி தோன்றி வளர்ந்தன? ஒரு விசேஷித்த புரதம் (புரோட்டின்) இரத்தத்தில் தானாகத் தோன்றி, தோலில் ஏற்பட்ட காயத்தை வேகமாகவும், பலமாகவும் மூடக்கூடிய வைபிரின் கம்பிகளை உருவாக்குகிறது என்பது மனதுக்குப் புரியாத ஒன்றாயுள்ளது. ஆண்டு பலவாய், தானியங்கிப் பொறியியல் துறை கழிவு நீரினால் எஞ்சின் பாதிப்படையாமலிருக்க உதவுக்கூடிய ஒரு ரேடியேட்டா கூலன்ட்டைக் (Radiator coolant) கண்டுபிடிக்க முயன்றும் முடியவில்லை. ஆனால் நம் உடலில் இரத்தம் உறைவதற்கான காரணிகள் தாமாக எழும்புகின்றன என்பது நம் கற்பனைக்கெட்டாத விஷயமாய் இருக்கிறது.

நாம் ஏற்கனவே பார்த்தபடி ஒவ்வொரு மனிதனும் வெட்டுக் காயங்கள், சிராய்ப்புகளை அனுபவித்திருக்கிறான். மற்ற விலங்குகளுக்கும் இது பொருந்தும். முதல் உயிரிக்கே இந்த இரத்தம், உறையும் அமைப்பு தேவைப்பட்டிருக்கும். அந்த முதல் உயிரியின் உடலில் வைபிரினோஜன் இல்லாமலிருந்திருந்தால், அது இரத்த ஒழுக்கினால் இறந்துபோயிருக்கும். அதற்கு சந்ததிகள் இருந்திருக்காது. இங்கே பரிணாமக் கொள்கைக்கு இடமில்லை. பல்லாயிரக் கணக்கான தவறான ஆரம்பங்களுக்குப்பின் இரத்தம் உறைவதற்கான



எளியதொரு அமைப்பு தோன்றியதாக நாம் எடுத்துக்கொண்டாலும், இந்த உறையும் அமைப்பு எப்படி வளர்ந்தது ப்ரோத்ராம்பினும் அதை ஊக்குவிக்கும் சுரப்பு நீரும் மெதுமெதுவாக வளர்ந்து இன்றைய நிலைக்கு வந்தது என நாம் சொல்லமுடியாது. இரத்தத்தை உறைய வைக்கும் அமைப்பு உண்டு அல்லது இல்லை என்று கூறவேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்று கிடையாது. வைபிரினோஜன் ஓரளவுதான் வைபிரின் ஆகிறது என்றாலும், இரத்த ஒழுக்கினால் நீங்கள் இறந்து விடுவீர்கள்.

ஆகவே, கடைசியில், விலங்குகளின் மெலிதான தோலின் தன்மையை முன்னறிந்த நுண்ணறிவு படைத்த வடிவமைப்பாளர் இரத்த ஒழுக்கு ஏற்படாமல் தடுக்கும் காரியங்களை இரத்தத்திற்குள் வைத்துள்ளார் என ஏற்றுக்கொள்வது தான் புத்திசாலித்தனம். தம் படைப்பை நேசிக்கும் தேவன் உயிரை மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றாகக் கருதுகிறார் என பைபிள் உரைக்கிறது. “மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. (லேவியராகமம் 17:11). உணவிற்காக ஒரு மாடோ, ஆடோ வெட்டப்படும்போது, அதன் இரத்தம் முதலாவது தரையில் ஊற்றப்பட்டு, மண்ணால் மூடப்படவேண்டும் என மோசேயின் நியாயப்பிரமாணம் வற்புறுத்தியது. அதன் பொருள் யாதெனில் படைத்தவருக்கே அவ்விலங்கின் உயிர் உரித்தானது என்பது (உபாகமம் 12:15,16).

# வினாவிடை

1. ‘‘ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்”, என தீர்க்கதரிசனம் உரைத்தது யார்?
2. ‘‘தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ?” என்றது யார்?
3. யாரிடம் பேதுரு “உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள் நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறோம்” என்று கூறினார்?
4. “தேவனே, என் இருதயத்தை ஆராய்ந்து அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்” என்று ஜெபித்தது யார்?
5. கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு, கர்த்தருடைய தூதன் எதோ செய்வான் என சங்கீதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன செய்வான்?
6. இயேசு எங்கே பிறப்பார் என்பது குறித்த தீர்க்கதரிசனம் பற்றி ஏரோதுக்குச் சொன்னது யார்?

7. ''வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டது'' யார்?

8. பவுல் எபேசுவிலிருந்து வந்த நண்பர்களுக்காக, அவன் அவர்களை விட்டுப் பிரியுமுன் ஜெபித்த போது, அவர்கள் அழுதார்கள். ஏன்?

9. ''கர்த்தாவே, என்னைத் தண்டியும், ஆனாலும் நான் அவமாய்ப் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும்'' என ஜெபித்தது யார்?

10. அன்னாளுக்கு எத்தனை மகள்கள் இருந்தார்கள்?

**விடைகள் :**

ஏசாயா (ஏசாயா 7:14); யோபு 2:10; சமாரியா நாட்டானான சமாரியா (அப். 8:22-24); தாவீது (சங்கீதம் 139:23); அவர்களை விடுவிக்கிறார்; பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரம் (மத். 2:4-6); ஸ்தேவான் (அப். 7:54-60); இனி அவனைப் பார்க்க மாட்டார்கள் எனத் தெரிந்திருந்தார்கள் (அப். 20:36-38); எரேமியா (எரே 10:24); 2 மகள்கள் (1சாமுவேல் 2:21).

# பாதையில் முகடுகள்

**(பணித்துளி தியானங்கள்)**

சிறுவனொருவன் செங்குத்தான மலைப்பாதையில் நடக்க தன் தங்கைக்கு உதவி செய்து கொண்டிருந்தான். "இது பாதையே அல்ல. ஒரே பாறையாயும் மேடாகவும் உள்ளது" எனத் தங்கை முறுமுறுத்தாள். அவள் அண்ணன் "இதுபாதை தான். மேட்டின் மேல் ஏறிச் செல்லவேண்டும்," என இளநகை பூத்துக் கூறினாள்.

தேவனுடைய ராஜ்யத்தை நோக்கிப் பயணிக்கும் நாமும் கூட, சிலவேளைகளில் நம் பாதையில் பாறைகளும் குன்றுகளும் தவிர வேறொன்றுமில்லை என எண்ணக்கூடும். "மேடுகள், குன்றுகள் மேல் நாம் ஏறி நடந்து செல்வதற்காகத் தான் அவை உள்ளன" என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ''ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்," என இயேசு நமக்குக் கூறியுள்ளார். அந்தச் சிறுமி மற்றும் உலகத்தின் கண்ணோட்டத்தில் அது பாதையே அல்ல. ஏனெனில் "கேட்டுக்குப் போகிற" விரிவும் விசாலமுமான வழியைத் தான் பெரும்பாலானோர் தேடுகிறார்கள்.

விசாலமானதாயிருக்கிற வழியில் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என விரிவும் விசாலமுமாயிருக்கிற வழியைப் பற்றி நமக்கு நினைவு படுத்துகிறார். விசாலமான





வழியில் எப்போதும் வாகனங்கள், மற்றும் மக்களால் போக்குவரத்து நெரிசல் உண்டு ஆனால் ராஜ்யத்திற்குச் செல்லும் பாதை குறுகியது. அதில் மக்களும் அதிகம் இல்லை.

நாம் எந்த வழியில் செல்கிறோம்? நாம் பயணிக்கும் பாதையில் எந்த அளவிற்குக் கூட்டம் இருக்கிறது? உலகோடு நாம் இசைந்து நடக்கிறோமெனில், நாம் தவறான முடிவெடுக்கவில்லையா? என உறுதி செய்து கொள்ள வேண்டும். திசை மாறுதல் எளிதில் ஏற்படலாம். வெகு விரைவிலேயே நாம் செல்ல விரும்பிய திசைக்கு எதிர்த்திசையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைக் காண்போம்.

நம் வாழ்க்கைப் பாதையில், உலகப் பிரியர்களான நம் அயலார் மற்றும் கூட்டாளிகள் போலவே நாமும் போகிறோம், செயல்படுகிறோம் என்று காண்கிறோமா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களைப் போலவே நாம் நடப்பதும், செய்வதும், விளையாடுவதும், புசிப்பதுமாக இருக்கிறோமெனில் ஏதோ ஒன்று தவறாயிருக்கிறது. நம் பேச்சும் உரையாடலும் பெரும்பாலும் நம் பணி, நம் தோட்டங்கள், நம் குடும்பங்கள், நம் வாகனங்கள், நம் விளையாட்டுப் போட்டிகள் பற்றித் தான் இருக்கின்றன. தேவனின் வாக்குத்தத்தங்கள் மற்றும் நம் நம்பிக்கை பற்றி இல்லையென்றால், நாம் தவறான திசையில் சென்று கொண்டிருக்கிறோம் எனலாம். நாம் சற்று நின்று நிதானிப்பது நல்லது. நம் பாதை காட்டும் வரைபடம் வேதம் தான். நம் வாழ்க்கைக்கான வழிகாட்டி புத்தகத்தை எத்தனை முறை அடிக்கடி படிக்கிறோம் என நம்மையே நாம் கேட்டுக்கொள்ளவேண்டும். நாமே நம் சொந்த வழியைக் கண்டு கொள்ளலாம் என்பது பயனற்றது; ஏனெனில் ''இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்."

மேடுகள், குன்றுகளைப் பற்றிக் கவலைப்படாதே. நாம் அவைகளின் மீது ஏறி நடந்து செல்வது அவசியம். நம் வளர்ச்சிக்கு அவை அவசியம். மறுபடியும் நம் ஆண்டவர் இப்படிக் கூறியுள்ளார். "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ, அவனுக்கு நான் ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்." ''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.

ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று நமக்கு நினைப்பூட்டுகிறார்.

மேற்கொள்வதற்கென்று அல்லது ஜெயங்கொள்வதற்கென்று ஏதாவது ஒன்று இருக்க வேண்டும். அப்படியில்லாவிடில் ஜெயங்கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. தேவன் தம் காருண்யத்தினால், அவர் குமாரன் மூலமாக உலகத்தில் நமக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் நாம் திடன் கொண்டிருக்க வேண்டும் என நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். இயேசு ஜெயங்கொண்டார். ஆகவே நாமும் கூட ஜெயங்கொள்ள முடியும். ஆம், பிரச்சனைகளாகத் தோன்றக்கூடிய நம் சோதனைகளும் பாடுகளும் உண்மையில் பிரச்சனைகளே அல்ல. நாம் மேல் ஏறுபவர்கள் என்று தேவனுக்குக் காட்டுவதற்கான வாய்ப்புகள் தான் அவை. இந்த லேசான உபத்திரவங்கள் நாம் ஜெயங்கொள்வதற்கும் தேவனுடைய ராஜ்யத்திற்குச் செல்லும் வழியில் ஏறிச் சென்று ஜெயங்கொள்வதற்கென ஏற்பட்டவை.

இந்த விதமாய்ப் பார்த்தால், நாம் பவுலோடு சேர்ந்து சந்தோஷமாய் "கிறிஸ்துமன் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" என கூறமுடியும்.

# வாசித்துச் சிந்தித்தல்

**(பத்திரிக்கை 45ன் தொடர்ச்சி)**

### மேற்கோள் 1 : ஒரு புதிய உலக அமைப்பு பற்றிய தேவனின் வாக்குத்தத்தம்

Isaiah 11:1-9

ஏசா 11:1 ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.

ஏசா 11:2 ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

ஏசா 11:3 கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும்,

ஏசா 11:4 நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.

ஏசா 11:5 நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு



இடைக்கச்சையுமாயிருக்கும்.

ஏசா 11:6 அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.

ஏசா 11:7 பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.

ஏசா 11:8 பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.

ஏசா 11:9 என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

ஏசா 11:10 அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.

ஏசா 11:11 அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி,

### மேற்கோள் 2-3 : ஒரு புதிய அமைப்பு பற்றிய தேவனின் வாக்குத்தத்தம் - மேலும் சில வசனங்கள்

ஏசாயா 2:4

ஏசா 2:4 அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.

ஏசா 65:17-24

ஏசா 65:17 இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை.

ஏசா 65:18 நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன்.

ஏசா 65:19 நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை.

ஏசா 65:20 அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்.

ஏசா 65:21 வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.

Isa 65:22 அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.

ஏசா 65:23 அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை; அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்.

ஏசா 65:24 அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்..

## வாசித்துச் சிந்தித்தல் விடைகள்

இங்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகள் வழிகாட்டியே தவிர முடிவானவை அல்ல. பெரும்பான்மைப் பதில்களோடு மேலும் சில தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவைகளை நீங்கள் விரும்புகிறீர்கள் என நம்புகிறோம்.

**கேள்வி 3:1 ஏசாயா தீர்க்கதரிசி வருங்கால அரசனைப் பற்றி விவரிக்கிறார். இந்த அரசன் சாதிக்கப்போகிற ஐந்து அல்லது அதற்கு அதிகமான காரியங்களைப் பட்டியலிடுக. இந்த அரசன் யார் என்று நீ நினைக்கிறாய் ?**

- ✦ அவர் போரை ஒரு முடிவுக்கு கொண்டு வருவார்.
- ✦ அவர் மக்களை சமாதானமான உற்பத்திறனுள்ள, நன்மைத்தரும் தொழில்களுக்கு நேராய் நடத்துவார்.
- ✦ ஏழைகள் நேர்மையாயும் நியாயமாயும் நடத்தப்படுவதை உறுதி செய்வார்.
- ✦ குற்றங்கள், ஒடுக்குதல், கொடுமை ஆகியவற்றை நிறுத்துவதற்கு மெய்யான நீதியைக் கொண்டு வருவார்.
- ✦ அவர் வியாதியையும் சிசு மரணத்தையும் மேற்கொள்வார்.
- ✦ அவருடைய ஆட்சி, துக்கம் தருவதற்குக் காரணமானவைகளை நீக்கி, மக்களை சந்தோஷம், அனுபவிக்கிறவர்களாக, திருப்தி அடைந்தவர்களாக ஆக்குவார்.
- ✦ அவர் தேசங்களுக்கிடையே உள்ள தகராறுகளை நியாயந்தீர்த்து மெய்யறிவும் நீதியுமான தீர்மானங்களை எடுப்பார். அதன்படி எல்லாரும் நடந்து கொள்வார்கள்.



- ✦ கடந்த கால கெட்ட காரியங்களை நினைவிருந்து துடைத்துப் போடுவார்.

இந்த இராஜா இயேசு கிறிஸ்துவே. கி.மு. 700 போல், தேவனுடைய வல்லமையான முன்னறிவின்படி, ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்தார். தாவீதின் வம்சாவழியினர் இஸ்ரவேலின் சிங்காசனத்தினின்று அறுப்புண்டு போன பின்னர் தாவீதரசனின் சிம்மாசனத்தில் அமரப்போகிற ராஜாவைக் குறித்துப் பேசுகிறார். (அதாவது அடிமரத்திலிருந்து ஒருகிளை எழும்பித் துளிர்க்கிறது போல) இதேதான் மரயாளுக்கு அவள் குமாரன் இயேசுவைப் பற்றி சொல்லப்பட்டது என்று சென்றவாராகக் கருத்தரங்கில் கண்டோம். (அதாவது அவருடைய தகப்பனாகிய தாவீதின் இராஜ்யத்தின் மேல் ஆளுகை செய்வார்). ஆதியிலிருந்தே இயேசு தேவனுடைய திட்டத்திலும் நோக்கத்திலும் இருந்து வந்தார். கீழ்க்கண்ட வசனம், இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன் அவரை மட்டுமல்ல, அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் தேவன் முன் அறிருந்திருந்தார் என்பதை மிக பலமாக எடுத்துக்காட்டுகிறது.

''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமற்றவர்களுமாகயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." (எபேசியர் 1:4-7).

**கேள்வி 3:2 வரப்போகிற ராஜாவின் சாதனைகளை விட இன்றைய உலகத் தலைவர்களின் சாதனைகள் வேறுபட்டவை எனக் காட்டுக. 5 வித்தியாசங்கள் தருக.**

- ✦ இன்றைய உலகத் தலைவர்களால் போரையும் வன்முறையையும் குறைக்க முடியவில்லை. நிலைத்து நிற்கும் சமாதானத்திற்காக வழியையும் காட்ட முடியவில்லை.
- ✦ ஆயுத உற்பத்தித் தொழில்கள் செழித்தோங்குகின்றன. ஆனால் இலட்சக்கணக்கானோர் வேலையில்லாமலும், வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகள் கூட இல்லாமலும் இருக்கிறார்கள்.
- ✦ குற்றங்களும் அநீதியும் பரவிக்கிடக்கின்றன. நீதிமன்றங்களால் இவற்றைச் சமாளிக்க முடியவில்லை.
- ✦ நோய்களும் ஊட்டச் சத்துக்குறைபாடுகளும் எங்கும் பரவியிருப்பதோடு, அதிகமான துன்பத்திற்குக் காரணமாகின்றன.
- ✦ ஐக்கிய நாடுகள் சபை என்றொரு சபை இருந்தாலும், நம் உலகம் தொடர்ந்து பிளவு பட்டே கிடக்கிறது. ஒரே சட்டத்தின் கீழ் முழு உலகையும் இணைக்க இயேசு ஒருவருக்கு மட்டுமே வல்லமையும் மெய்யறிவும் (ஞானம்) இருக்கப் போகிறது.